tnkalvi.online

No. of Printed Pages : **8**

6768

பதிவு எண்
Register Number

PART - III
புவியியல் / GEOGRAPHY

(தமிழ் மற்றும் ஆங்கில வழி / Tamil & English Version)

கால அளவு : 3.00 மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 70
Time Allowed : 3.00 Hours] [Maximum Marks : 70

அறிவுரைகள் : (1) அனைத்து வினாக்களும் சரியாக பதிவாகி உள்ளதா என்பதனை சரிபார்த்துக் கொள்ளவும். அச்சுப்பதிவில் குறையிருப்பின் அறைக் கண்காணிப்பாளரிடம் உடனடியாகத் தெரிவிக்கவும்.

(2) **நீலம்** அல்லது **கருப்பு** மையினை மட்டுமே எழுதுவதற்கும் அடிக்கோடிடுவதற்கும் பயன்படுத்த வேண்டும். படங்கள் வரைவதற்கு பென்சில் பயன்படுத்தவும்.

Instructions : (1) Check the question paper for fairness of printing. If there is any lack of fairness, inform the Hall Supervisor immediately.

(2) Use **Blue** or **Black** ink to write and underline and pencil to draw diagrams.

பகுதி – I / PART - I

குறிப்பு : (i) **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **15x1=15**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.

Note : (i) Answer **all** the questions.

(ii) Choose the most appropriate answer from the given **four** alternatives and write the option code and the corresponding answer.

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-geography-public-march-2023-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

1. வானிலையியல் என்பது _____ பற்றிய படிப்பாகும்.

(அ) உலோகங்கள் (ஆ) வளிமண்டலம் (இ) குறுங்கோள் (ஈ) விண்கற்கள்

Meteorology is a study of _____.

(a) Metals (b) Atmosphere (c) Asteroid (d) Meteors

2. ஜூன் 21 -இல் சூரிய ஒளிக்கதிர் _____ இல் செங்குத்தாக விழுகிறது.

(அ) பூமத்தியரேகை (ஆ) கடகரேகை

(இ) ஆர்டிக் வட்டம் (ஈ) மகரரேகை

On June 21 the Sun's rays fall vertically at :

(a) The Equator (b) The Tropic of Cancer

(c) The Arctic Circle (d) The Tropic of Capricorn

3. புவியின் உள் பகுதியில் காணப்படும் தகடு போன்ற திடமாக்கப்பட்ட கிடைமட்ட லாவா என்பது :

(அ) சில் (ஆ) டைக் (இ) லாக்கோலித் (ஈ) பாத்தோலித்

Solidified sheet-like horizontal lava layer inside the Earth is called as :

(a) Sill (b) Dyke (c) Lacolith (d) Batholith

4. கொள்ளிடம் ஆறு _____ -ன் கிளையாறு ஆகும்.

(அ) பெண்ணாறு (ஆ) பவானி ஆறு

(இ) காவிரி ஆறு (ஈ) பாலாறு

Kollidam river is a distributary of :

(a) The Pennar River (b) The Bhavani River

(c) The Cauvery River (d) The Palar River

5. உலகின் மிகப்பெரிய பனியாறு லேம்பார்ட் எந்த கண்டத்தில் உள்ளது ?

(அ) ஆசியா (ஆ) அண்டார்டிக்கா

(இ) வட அமெரிக்கா (ஈ) ஆப்பிரிக்கா

In which continent the world's largest glacier Lambert is located ?

(a) Asia (b) Antarctica

(c) North America (d) Africa

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-geography-public-march-2023-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

6. அனைத்து பக்கங்களிலும் நீரால் சூழப்பட்ட ஒரே கடல் :

(அ) தென் சீனக்கடல் (ஆ) சாக்கடல்

(இ) ஏரல் கடல் (ஈ) சர்கேசோ கடல்

The only Sea surrounded by water on all sides is _____.

(a) The South China Sea (b) The Dead Sea

(c) The Aral Sea (d) The Sargasso Sea

7. கடல் நீரின் ஆழம் _____ என்ற அலகில் அளக்கப்படுகிறது.

(அ) பாதோம் (ஆ) ரிக்டர்

(இ) மீட்டர் (ஈ) நாட்டிகல் மைல்

Depth of water is measured in the unit _____.

(a) Fathom (b) Richter

(c) Metres (d) Nautical mile

8. உயரம் அதிகரிக்கும் போது வளிமண்டல அழுத்தமானது :

(அ) குறையும்

(ஆ) நிலையாக இருக்கும்

(இ) தொடர்ந்து மாறிக்கொண்டு இருக்கும்

(ஈ) அதிகரிக்கும்

What happens to atmospheric pressure with increase in altitude ?

(a) It decreases

(b) It remains constant

(c) It constantly fluctuates

(d) It increases

9. எந்த அடுக்கில் ஒளிரும் மேகங்கள் உருவாகின்றன ?

(அ) இடையடுக்கு (ஆ) அடியடுக்கு

(இ) வெப்ப அடுக்கு (ஈ) படையடுக்கு

In which layer Luminous clouds are formed ?

(a) Mesosphere (b) Troposphere

(c) Thermosphere (d) Stratosphere

10. ஆப்பிரிக்க வெப்பமண்டல புல்வெளி பிரதேசங்களின் வேறு பெயர் :

(அ) பாம்பாஸ் (ஆ) சவானா (இ) டவுன்ஸ் (ஈ) ஸ்டெப்பி

The Tropical grasslands of Africa is also called as :

(a) Pampas (b) Savannah (c) Downs (d) Steppes

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-geography-public-march-2023-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

11. இவற்றில் எது தவறான இணை ?

(அ) தென் ஆப்பிரிக்கா - நமீபியன் பாலைவனம்

(ஆ) இந்தியா - தார் பாலைவனம்

(இ) தென் அமெரிக்கா - அட்டகாமா பாலைவனம்

(ஈ) ஆஸ்திரேலியா - கலஹாரி பாலைவனம்

Which one is not correctly matched ?

(a) South Africa - Namibian desert

(b) India - Thar desert

(c) South America - Atacama desert

(d) Australia - Kalahari desert

12. மின்னலின் போது அதன் வெப்பம் :

(அ) 9892.2° செ (ஆ) 9982.2° செ (இ) 9899.2° செ (ஈ) 8892.2° செ

When lightning occurs, the air temperature is :

(a) 9892.2°C (b) 9982.2°C (c) 9899.2°C (d) 8892.2°C

13. இந்தியாவின் உலகளாவிய ஊடுருவும் செயற்கைக்கோள் :

(அ) GLONASS (ஆ) IRNSS (இ) Beidou (ஈ) GPS

Global Navigation Satellite System of India is :

(a) GLONASS (b) IRNSS (c) Beidou (d) GPS

14. காற்று அதிகமாக உள்ள கோள் :

(அ) வியாழன் (ஆ) சனி (இ) செவ்வாய் (ஈ) நெப்டியூன்

The windiest planet is :

(a) The Jupiter (b) The Saturn (c) The Mars (d) The Neptune

15. அழுத்த விசை ஒரு பக்கம் அதிகமாக இருப்பின் ஒரு மடிப்புக்கால் மற்றொன்றைவிட மிகுதியாக இருக்கும் மடிப்பு _____ என அழைக்கப்படுகிறது.

(அ) தலைகீழ் மடிப்பு (ஆ) சமச்சீர் மடிப்பு

(இ) படிந்த மடிப்பு (ஈ) சமச்சீரற்ற மடிப்பு

When compressional force is more from one end, one limb is steeper than the other is called _____ fold.

(a) over turned fold (b) symmetrical fold

(c) recumbent fold (d) asymmetrical fold

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-geography-public-march-2023-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - II / PART - II

குறிப்பு : **எவையேனும் ஆறு** வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் **24** **-க்கு கட்டாயமாக** விடையளிக்கவும். **6x2=12**

Note : Answer **any six** questions. Question No. **24** is **Compulsory**.

16. புவியியலின் மூன்று பெரும் பிரிவுகள் யாவை ?
What are the three domains of Geography ?

17. உள் கோள்கள் என்றால் என்ன ?
What are the inner planets ?

18. புவியின் உட்கரு ஏன் திட நிலையில் உள்ளது ?
Why is the inner core of the Earth solid ?

19. புவிவெளி இயக்கச் சக்தி செயல்முறைகளை வரையறுக்கவும்.
Define exogenic processes.

20. உயர் ஓதம், தாழ் ஓதம் – வேறுபடுத்துக.
Differentiate - High Tide from Low Tide.

21. மலைக்காற்று என்றால் என்ன ?
What is Mountain wind ?

22. உயிர்க்கோளம் என்றால் என்ன ?
What is Biosphere ?

23. வறட்சி – குறிப்பு தருக.
Write a short note on Drought.

24. வர்தா புயல் பற்றி எழுதுக.
Write a short notes on Vardha Cyclone.

[திருப்புக / Turn over

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-geography-public-march-2023-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - III / PART - III

குறிப்பு : எவையேனும் ஆறு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண் **33** -க்கு **கட்டாயமாக** விடையளிக்கவும். **6x3=18**

Note : Answer **any six** questions. Question No. **33** is **Compulsory**.

25. தொலை நுண்ணுணர்வு பற்றி குறிப்பு வரைக.
Write a note on Remote Sensing.

26. தற்பொழுது 15° கிழக்கு தீர்க்கக்ரேகையில் உள்ள நைஜிரியாவில் காலை 10 மணி என்றால், அதே நேரத்தில் 75° மேற்கு தீர்க்கரேகையில் அமைந்துள்ள நியூயார்க் நகரத்தின் உள்நாட்டு நேரத்தைக் கணக்கிடுக.
Calculate the local time in New York (U.S.A.) Longitude 75° W, when it is 10 a.m. in Nigeria of Longitude 15° E.

27. புவித்தட்டுக்கள் ஏன் நகர்கின்றன ?
Why do plates keep moving ?

28. ஆற்றுவளைவு எவ்வாறு குருட்டு ஆறாக மாறுகிறது என்பதை விவரிக்கவும்.
Explain how a Meander changes into an Oxbow lake ?

29. கடல் நீரோட்டங்களின் முக்கியத்துவத்தைப் பற்றி எழுதுக.
Write about the significance of Ocean Currents.

30. மழைபொழிவின் வடிவங்களைப் பட்டியலிடுக.
List the forms of Precipitation.

31. நுகர்வோர் என்றால் என்ன ? அவற்றின் வகைகளை விவரிக்கவும்.
What are consumers ? Explain the types of consumers.

32. புயலுக்கு பிறகு பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் யாவை ?
What are the rules of action after a cyclone ?

33. நில அதிர்வு அலைகளின் பல்வேறு வகைகளை விளக்குக.
Explain different types of Seismic waves.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-geography-public-march-2023-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

பகுதி - IV / PART - IV

குறிப்பு : **அனைத்து** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **5x5=25**

Note : Answer **all** the questions.

34. (அ) புவியியலின் ஐந்து கருப்பொருட்கள் எவ்வாறு ஒன்றுடன் ஒன்று தொடர்புடையன ?

அல்லது

(ஆ) பெரு வெடிப்புக் கொள்கையை விவரிக்கவும்.

(a) Describe how the five themes of Geography are inter-related.

OR

(b) Explain the Big bang Theory.

35. (அ) பாறைச் சுழற்சியின் நிலைகளைப் படம் வரைந்து விவரிக்கவும்.

அல்லது

(ஆ) ஆற்றினால் ஏற்படக்கூடிய நிலத்தோற்றங்களை பட்டியலிட்டு அவற்றில் ஏதேனும் இரண்டு நிலத்தோற்றங்களைப் படத்துடன் விவரிக்கவும்.

(a) Draw a diagram and describe the stages of Rock Cycle.

OR

(b) List the Landforms made by a river and explain any two Landforms with diagrams.

36. (அ) பெருங்கடலின் வெப்பநிலை கிடைப்பரவலை பாதிக்கும் காரணிகளை விளக்குக.

அல்லது

(ஆ) வளிமண்டல அடுக்குகளை படத்துடன் விவரிக்கவும்.

(a) Explain the factors affecting horizontal distribution of ocean temperature.

OR

(b) Draw and explain Layers of the Atmosphere.

37. (அ) தூந்திர உயிரினச் சூழ்வாழிடம் பற்றி விவரிக்கவும்.

அல்லது

(ஆ) இடி மின்னலின் போது நம்மை தற்காத்து கொள்வதற்கு பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை விவரிக்கவும்.

(a) Discuss the Tundra Biome.

OR

(b) Describe the ways and means to protect ourselves from lightning and thunder.

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-geography-public-march-2023-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share

tnkalvi.online

38. (அ) கொடுக்கப்பட்டுள்ள உலக புறவரி நிலவரைபடத்தில் புவித்தட்டுகளை குறித்து அவற்றை பற்றி சுருக்கமாக விவரிக்கவும்.

அல்லது

(ஆ) வட அட்லாண்டிக் பெருங்கடல் நீரோட்டங்களை உலக நிலவரைபடத்தில் குறித்துக்காட்டி அவை எவ்வாறு வட அமெரிக்கா மற்றும் ஐரோப்பாவின் காலநிலையில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை விளக்குக.

(a) On the outline map of the World, mark the distribution of Tectonic plates and explain briefly.

OR

(b) Draw the ocean currents of North Atlantic Ocean and bring out their influence on climate in North America and Europe.

- o 0 o -

tnkalvi.online

TN Kalvi Online · tnkalvi.online/question-papers/class-11-geography-public-march-2023-tam-eng · Source: DGE TN
Share your study materials with us: tnkalvi.online/share